(1)

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108505

1. District மாவட்டம் : Coimbatore  PS: காவல்நிலையம் : V&AC  Year: ஆண்டு : 2021  FIR No.: மு.த.அ. எண் : 12/2021/AC/CB  Date: நாள் : 20.03.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption  Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: by the Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் : 19.03.2021  Date to : நாள் வரை :
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் : at about 11.30 hrs  Time to : நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 20.03.2021  Time : நேரம் : 08.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 20.03.2021  Time : நேரம் : 08.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : tamil typed in computer.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : at about 30 km South East
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி : O/O. Assistant Engineer TANGEDCO, Pappampatti Coimbatore District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : K. Kollai Eswari  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : V. Karupasamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 30/2021  (d) Nationality : நாட்டினம் : Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation : தொழில் : Petty Shop  (g) Address : முகவரி : Door No. 1/163 G2, Site No. 17 Perumal Nagar, Pappampatti Sulur, Coimbatore District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Muthuraj, Assistant Engineer, O/O. Assistant Engineer TANGEDCO, Pappampatti, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கோபாலகிருஷ்ணன்
20.3.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 20/3/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.03.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. H. Ganesh
Rank: நிலை Deputy Superintendent of Police. V&AC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

**<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 12/2021/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி...</u>**

20.03.2021-ம் தேதி சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் T.H.கணேஷ் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, கோயம்புத்தூர், சூலூர், பாப்பம்பட்டி, பெருமாள் நகர், கதவு எண்.1/163, G2, சைட் எண்.17, என்ற முகவரியில் குடியிருந்து வரும் கருப்புசாமி என்பவரது மனைவி K.கோட்டை ஈஸ்வரி என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனு மற்றும் ஒரு CD-ஐ என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: K.கோட்டை ஈஸ்வரி, வயது 30, க/பெ.V.கருப்புசாமி, பெறுநர்: உயர்திரு. டி.எஸ்.பி அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர், ஐயா, நான் சூலூர், பாப்பம்பட்டி பெருமாள் நகரில் கடந்த ஐந்து வருடங்களாக எனது கணவர் மற்றும் இரு குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் பெருமாள் நகரின் தெரு முனையில் சிறியதாக பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். எனது கணவர் தனியார் ஸ்டீல் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். கடந்த 03.06.2016-ம் தேதி பாப்பம்பட்டி பெருமாள் நகரில் சைட் எண். 17-ல் சுமார் 2¼ சென்ட் இடத்தை எனது கணவர் V.கருப்புசாமி பெயரில் விலைக்கு வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். தற்போது முதல் மாடியில் 700 சதுரடியில் வீடும் மற்றும் இரண்டாவது மாடியில் 500 சதுரடியில் ஒரு வீடும் கட்டியுள்ளோம். மேற்படி புதிதாக கட்டிய இரண்டு வீடுகளுக்கும் வீட்டு வரி கட்டியுள்ளோம். மேற்படி இரண்டு வீடுகளுக்கும் 1/163 G1 மற்றும் 1/163 G2 என்ற கதவு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது இரண்டாவது மாடியில் குடியிருந்து வருகிறோம். புதிதாக வீடு கட்டிய இரண்டு வீடுகளுக்கு புதிய மின் இணைப்பு பெற வேண்டி 15.03.2021-ம் தேதி பாப்பம்பட்டி நால்ரோட்டில் அமைந்துள்ள ஜெராக்ஸ் கடையில் நானும் என் கணவரும் வீட்டு கிரைய பத்திரம் மற்றும் வீடு வரி ரசீதுகள்

ஆகியவற்றின் நகல்களை எடுத்து சென்று மின் இணைப்புக்கு ஆன் லைனில் பதிவு செய்துதோம். மேற்படி ஆன் லைனில் பதிவு செய்த விபரங்களை எங்களுக்கு பிரிண்ட்அவுட் எடுத்து கொடுத்தார். அதற்கான ஒப்புகை ரசீதில் ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனியாக மின் இணைப்பு கட்டணமாக ரூ.2,818/- என்று குறிப்பிடப்பட்டிருந்தால் மேற்படி இரண்டு வீட்டிற்குண்டான கட்டணத்தை ஆன் லைனில் செலுத்துவதற்காக பணம் கொடுத்தபோது அங்கிருந்தவர் பாப்பம்பட்டி EB ஆபிசில் கொண்டுபோய் கட்டுங்கள் என்று சொன்னார். நாங்கள் அதை வாங்கிகொண்டு பாப்பம்பட்டி EB ஆபிசுக்கு அன்று மதியம் சுமார் 1.00 மணிக்கு சென்று AE சாரை பார்த்து வீட்டு சரிவீஸ் வாங்க ஆன் லைனில் பதிவுசெய்துள்ள விபரத்தை தெரிவித்து இரண்டு ஆன் லைனில் பதிவு செய்த விண்ணப்பங்களை கொடுத்தோம். அப்போது அவர் வெளியில் இருந்த போர் மேனிடம் விண்ணப்பத்தை கொடுக்க சொன்னார். நாங்கள் போர்மேனிடம் விண்ணப்பத்தை கொடுத்த போது அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு, க.எண். G2 என்ற விண்ணப்பத்தில் கதவு எண்ணுக்கு பதிலாக S.F எண் என்று தவறுதலாக பதிவு செய்திருப்பதாகவும், அதை மாற்றி கொண்டுவரச்சொன்னார். உடனே நாங்கள் மீண்டும் ஜெராக்ஸ் கடைக்கு சென்று ஆன் லைனில் மாற்றிவிட்டு போர்மேனிடம் விண்ணப்பத்தை திரும்ப கொடுத்தோம். அப்போது அவர் அன்று சாய்ங்காலமே வீட்டை வந்து பார்த்து வெரிபிகேசன் செய்து லைன் தருவதாக சொன்னார். அப்போது பாப்பம்பட்டி AE அவர்களின் பெயர் முத்துராஜ் என்று தெரிந்து கொண்டோம். பின்னர் நாங்கள் வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டோம். அன்று சாய்ங்காலம் சுமார் 4 மணிக்கு போர் மேன் வந்து எங்கள் வீட்டை பார்த்துவிட்டு மீட்டர் பெட்டி வைக்க மர பாக்ஸ் அடித்து, ஒயரிங் வேலையை முடிச்சிட்டு விண்ணப்பங்களை கொண்டு வந்து கொடுங்கள் என்று சொல்லி எங்களுடைய விண்ணப்பங்களை எங்களிடமே திருப்பி கொடுத்துவிட்டார். அவர் சொன்னபடி மர பாக்ஸ் அடித்து ஒயரிங் வேலையை முடித்துவிட்டோம். நேற்று 19.03.2021-ம் தேதி காலை எனது கணவர் வேலைக்கு செல்லும் போது பணம் கட்டுவதற்காக சுமார் 08.00 மணிக்கு EB ஆபிசுக்கு சென்றார். அப்போது போர்மேன் மீண்டும் எங்கள் வீட்டை பார்க்கவேண்டும் என்று சொன்னதால், போர்மேன் வருவார் என்று என் கணவர் போனில் தகவல் சொன்னார். காலை சுமார் 10.30 மணிக்கு என் கணவர் சொன்னது போல் போர்மேன் வந்து எங்கள் வீட்டை பார்த்துவிட்டு கனெக்சன் கொடுத்துவிடலாம் ஆபீசுக்கு போய் 1.00 மணிக்குள் பணத்தை கட்டசொன்னார். நான்

எனது கணவர் வேலை செய்யும் இடத்திற்கு சென்று ரூ.7,500/- ஐ வாங்கிகொண்டு EB ஆபிசுக்கு பணம் கட்ட வரும் வழியில் வந்த பஞ்சாயத்து தலைவர் வெள்ளையன் என்பவர் என்னிடம் பேசி விபரம் தெரிந்துகொண்டு அவரும் என்னுடன் EB ஆபிசுக்கு வருவதாக சொன்னர். நேற்று காலை சுமார் 11.30 மணிக்கு நாங்கள் EB ஆபிசுக்கு பணம் கட்ட சென்றோம். அப்போது அங்கிருந்த போர்மேன், AE சார் அலுவலகத்தில் இல்லை என்றும், கொஞ்ச நேரம் இருக்க சொன்னார். சிறிது நேரத்தில் AE வந்துவிட்டார். நானும் தலைவரும் போய் AE முத்துராஜ் அவர்களை பார்த்தோம். அப்போது அவர் என்னம்மா என்று கேட்டார். அதற்கு என்னுடன் இருந்த தலைவர் பணம் கட்ட வந்திருப்பதாக சொன்னார். அதற்கு AE முத்துராஜ் யார் பெயரில் கட்ட வேண்டும் என்று கேட்டார். நான் சார் கருப்புசாமி சார் என்று எனது கணவர் பெயர் சொன்னேன். அதற்கு அவர் பணம் கட்டிட்டீங்களா என்று கேட்டார். அதற்கு நான் வீட்டை வந்து பார்த்துட்டாங்க பணம் கட்ட வந்துள்ளேன் என்று சொன்னேன். மூனு அப்பிளிகேசன் இருக்கு என்று கேட்டார். நான் ரெண்டு தான் என்று சொன்னேன். இல்லை மூனு இருக்கு ஒன்ன கேன்சல் பண்ண எழுதி கொடுங்க என்று சொன்னார். நாங்க ஏற்கனவே கேன்சல் பண்ணிட்டோம் என்று சொன்னேன். அப்போது அவர் ஒரு கனெக்சனுக்கு 6,000/- ரூபாய் ரெண்டுக்கு சேர்த்து ரூ.12,000/- பணம் கொடு என்றும், கட்ட வேண்டிய பணம் ரூ.2,500/-தானே என்றெல்லாம் சொல்லக்கூடாது என்றும், இதுக்கு ரெக்கமண்ட் வேற கூட்டிட்டு வந்திட்டீங்க என்று சொன்னார். அதற்கு தலைவர் நான் சும்மாதான் வந்தேன் சார் என்று சொன்னார். சார் கொஞ்சம் கொறச்சுக்கோங்க என்றும், என்னிடம் பணம் ரூ.7,500/- மட்டும் இருப்பதாக சொன்னேன். அதற்கு AE முத்துராஜ் அதெல்லாம் வீட்டில் இருக்கும் போய் எடுத்துட்டு வா என்று சொன்னார். நான் மீண்டும் சார் பணத்தை கொஞ்சம் கம்மி பண்ணுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரிமா ஒரு அப்பிளிகேசனை கேன்சல் செய்ய லெட்டர் எழுதி கொடுத்திட்டு ரெண்டு சர்வீசுக்கும் கனெக்சன் கொடுக்க 10,000/- ரூபாயை கொண்டுவந்து கொடு என்று சொல்லி ரெண்டு அப்பிளிகேசனையும் என்னிடமே திருப்பி கொடுத்துவிட்டார். மேற்படி எங்களுக்குள் நடந்த உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்தேன். நானும் வேறு வழியில்லாம சரிங்க சார் நான் எப்ப வரவேண்டும் என்று கேட்டேன். அதற்கு AE முத்துராஜ் மறு நாள் மதியம் 1.00 மணிக்கு மேல் பணத்துடன் வரச்சொன்னார். நானும் எனது கணவரும் யோசித்து பார்த்தில்

இரண்டு புதிய வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்காக அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் தலா ரூ.2,818/- வீதம் மொத்தம் ரூ.5,636/- மட்டுமே கட்ட வேண்டும். ஆனால் AE முத்துராஜ் அவர்கள் ரூ.10,000/- கொண்டு வரச்சொல்லி கூடுதலாக ரூ.4,364/-ஐ லஞ்சமாக கேட்கிறார். எனவே AE முத்துராஜ் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து இரண்டு மின் இணைப்பு வாங்க எங்களுக்கு விருப்பம் இல்லை. எனவே நாங்கள் புதிதாக கட்டிய இரண்டு வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க லஞ்சம் கேட்கும் பாப்பம்பட்டி EB ஆபீஸ் AE முத்துராஜ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் 19.03.2021-ம் தேதி காலை 11.30 மணிக்கு AE திரு.முத்துராஜ் அவர்களை அவரது பாப்பம்பட்டி அலுவலகத்தில் நேரில் சந்தித்தபோது எங்களுக்குள் நடந்த உரையாடல்களை நான் எனது செல்போனில் பதிவு செய்ததை CD-யில் பதிவிறக்கம் செய்துள்ளேன். அந்த CD-ஐ தங்களிடம் தற்போது புகார் மனுவுடன் உரிய நடவடிக்கைக்காக இணைத்து கொடுக்கிறேன். இப்படிக்கு (Sd-xxxxx) இடம்: கோவை நாள்: 20.03.2021 மேலும் புகார்தாரர் தனது செல்போனில் பதிவுசெய்திருந்த ஆடியோ பதிவை பதிவிறக்கம் செய்து ஒப்படைத்திருந்ததை அலுவலக கணினியில் பதிவேற்றம் செய்தும் அந்த உரையாடல்களை புகார்தாரரின் முன்னிலையில் கேட்டு விபரம் தெரிந்துகொண்டேன். மேற்படி புகார் சம்பந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டத்தில் இருந்தும், எதிரிக்கும் வாதிக்கும் இடையே நடந்த உரையாடல்களை கேட்டதிலிருந்தும் புகாரின் உண்மைத்தன்மை உறுதிசெய்யப்பட்டு எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 20.03.2021-ம் தேதி காலை 09.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.12/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரி திரு.முத்துராஜ், உதவி மின்பொறியாளர், பாப்பம்பட்டி உதவிமின் பொறியாளர் அலுவலகம் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Respected Sir, Received the complaint on 20.3.2021 at 8.30 hrs sd/-(xxxx) 20/3/2021 DSP/VAC/CBE. Respected Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.12/2021/AC/CB u/s 7(a) of the Prevention of

Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 20.03.2021 at 09.15 hrs sd/-(xxxx) 20/3/2021 DSP/VAC/CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு மற்றும் 65(B), (4)(C) of the Indian Evidence Act-1872 சான்றுடன் கூடிய Compact Disc (CD-R) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

20/3/2021

(T.H. கணேஷ்)
காவல் துணைக்கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.